# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.179/2024 | Date: 05.02.2026 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **சக்திவேல்ராஜா** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை:–**

1) நான் லாரி மற்றும் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். எத்தனை லாரி வைத்துள்ளேன் என்றால் 05 லாரிகள் வைத்துள்ளேன். 05 லாரியும் எனது பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி, லாரிகளின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. மேற்படி, லாரிகள் அனைத்தையும் வங்கி கடன் மூலமாக தான் வாங்கினேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் லாரி வாங்கி / விற்கும் தொழில் செய்த வகையிலும், கூட்டுறவு வங்கியில் பணிபுரிந்த வகையிலும் எனக்கு தெரியும்.

2) எதிரி என்னிடம் எந்த தேதியில் பணம் வேண்டும் என்று கேட்டார் என்றால் தேதி என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. எதிரி என்னிடம் பலமுறை கடன் கேட்டு நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தொகையை கேட்டு எதிரி என்னிடம் எத்தனை முறை அணுகினார் என்றால் இரண்டு மாதமாக கேட்டுகொண்டிருந்தார். இரண்டு மாதமாக பணம் இல்லாததால் நான் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்த்துவிட்டு கொடுக்கலாம் என்று இருந்தேன்.

3) எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் கடந்த 09-10-2022 ம் தேதி ரூ.6,00,000/-ம் தொகை கொடுத்தேன். எவ்வளவு வட்டிக்கு கொடுத்தேன் என்றால் ரூ.1.50/- வட்டிக்கு கொடுத்தேன். எதிரிக்கு பணத்தை எங்கு வைத்து, யார் முன்னிலையில் கொடுத்தேன் என்று நான் எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, எனது பட்டறையில் வைத்து கொடுத்தேன். எதிரி வாங்கிய கடனுக்கு மாதம் மாதம் சரியாக வட்டி கொடுத்தார் என்றால் இல்லை, 02 மாதங்கள் கொடுத்தார், அதன்பின்னிட்டு முறையாக செலுத்தவில்லை.

4) எதிரிக்கு கடன் கொடுத்தபோது செக்யூரிட்டிக்காக என்னென்ன ஆவணங்கள் பெற்றேன் என்றால் கடனுறுதி சீட்டு ஒன்று பெற்றேன். மேற்படி, கடனுறுதி சீட்டு நிரப்பப்படாமல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி, கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் லாரி பட்டறையில் வைத்து எழுதப்பட்டது. யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் அங்கிருந்தவர்கள் செய்தார்கள். எதிரி கொடுத்த கடனுறுதி சீட்டின் மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5) எதிரிக்கு கொடுத்த பணத்தை எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. எதிரிக்கு கடன் கொடுத்த பின்னிட்டு எதிரியை எத்தனை முறை சந்தித்தேன் என்றால் நிறைய முறை சென்று பணம் கேட்டேன். எங்கெங்கு வைத்து கேட்டேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. அதனை, நான் எனது புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தவில்லை.

6) எதிரி கூட்டுறவு வங்கி பணியாளராக இருந்து ஓய்வு பெற்று பண பலன்கள் பெற்றிருந்த சமயத்தில் எதிரி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி பெற்ற கடனுக்கு மாதம் என்ன வட்டி ஆகிறது என்றால் மாதம் ரூ.9,000/-ம் ஆகும். எதிரி இரண்டு மாதத்திற்கு பின்பு வட்டி செலுத்தாத நாளில் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை கடனுறுதி சீட்டின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் நேரில் சென்று அவரிடம் பணம் கேட்டுகொண்டு தான் இருந்தேன்.

7) எதிரியை கடைசியாக எப்போது சந்தித்து கடன் கேட்டேன் என்றால் கடந்த 10-01-2024 ம் தேதியன்று கடனுறுதி சீட்டினை திரும்ப பெற்றுக்கொண்டு ரூ.6,50,000/-ற்கு காசோலை கொடுத்தார். ரூ.6,50,000/- காசோலையை எங்கு வைத்து, யார் முன்னிலையில் கொடுத்தார் என்று நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.6,50,000/-ற்கு காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்றால் லாரி ஆபிஸில் வைத்து கொடுத்தார். எதிரி காசோலை கொடுத்த தேதியில் எனக்கும், எதிரிக்கும் வேறு எந்த பண பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரிதான்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Sakthivelraja

Judicial Magistrate No.1,
Sankari.